# இந்திய உயர் ஸ்தானிகராலயம்

# கொழும்பு

************

**ஊடக அறிக்கை**

## 2020-21 கல்வியாண்டுக்கான சுய நிதியிடல் திட்டம்

இந்திய உயர் ஸ்தானிகராலயம் 2020-21 கல்வியாண்டுக்காக சுயமாக நிதித் தேவையைப் பூர்த்தி செய்யும் திட்டத்தின் கீழ் மருத்துவம் (MBBS), பல் மருத்துவம் (BDS), பொறியியல் (BE), தொழில் நுட்பவியல் (B.Tech), மருந்தியல் (B.Pharmacy) மற்றும் கட்டிடக் கலை (B.Arch) துறைகள் சார்ந்த பட்டப்படிப்புக் கற்கை நெறிகளுக்கு தகுதியான இலங்கை மாணவர்களிடமிருந்து (இந்திய வம்சாவழி (PIO), வெளிநாடுவாழ் பிரஜாவுரிமைக்கான இந்திய அட்டை வைத்திருப்போர்கள் மற்றும் இந்தியாவில் வசிக்காத இந்தியர்கள் தவிர்ந்த) விண்ணப்பங்களை வரவேற்கிறது.

2. மருத்துவம்/பல் மருத்துவ நெறிகளுக்காக விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் 2020 ஜூலை 26 ஆம் திகதி, தேசிய பரீட்சைகள் அமைப்பினால் (NTA) நடத்தப்படவிருக்கும் 'நீட்' (NEET) பரீட்சையில் ஆகக்குறைந்தது 50 சதவீத புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும். கட்டிடக் கலை பட்டப் படிப்பைப் தொடர விரும்புவோர், புதுடில்லி, கட்டிடக் கலை சபையினால் குறித்துரைக்கப்பட்ட தகுதிகாண் உளச்சார்பு பரீட்சையில் சித்தியெய்தவேண்டிய தேவை உள்ளது.

3. ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள், வேலை நாட்களில் பி.ப 2.00 முதல் பி.ப 4.00 (1400-1600hrs) மணிவரையான இடைப்பட்ட நேரத்தில், கொழும்பு 3 இல் அமைந்துள்ள, இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் கல்விப் பிரிவில் இலங்கை கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் மற்றும் உயர் தரச் சான்றிதழ்கள் (பத்தரமுல்லையிலுள்ள கல்வித் திணைக்களத்தால் வழங்கப்பட்டது) அல்லது லண்டன் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் மற்றும் உயர் தரச் சான்றிதழ்களுடன் பிறப்புச் சான்றிதழையும்

காண்பித்து விண்ணப்பப் படிவங்களை பெற்று அவற்றைப் பூர்த்தி செய்து சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றனர்.

4. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் தேவையான ஆவணங்களுடன் **2020 ஜூன் 10 ஆம்** திகதிவரை உயர் ஸ்தானிகராலயத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் . ஆனாலும் NEET புள்ளிச் சான்றிதழ் விண்ணப்பதாரிகளுக்கு கிடைக்கப்பெற்றவுடன் சமர்ப்பிக்கவேண்டுமென அறிவுறுத்தப்படுகிறது

****

கொழும்பு

20 மே 2020